# මුදල් කොමිෂන් සභාව

**(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154 ‘ඡ’ ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී)**

# நிதி ஆணைக்குழு

**(அரசியலமைப்பின் 154’எஆம் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்டது)**

# Finance Commission

**(Established under Article 154 R of the Constitution)**

## වසර 2014 සඳහා වූ මුදල් කොමිෂන් සභාවේ
## වාර්ෂික කාර්යසාධන වාර්තාව සහ වාර්ෂික ගිණුම්

## 2014 ஆம் ஆண்டுக்கானவருடாந்த செயலாற்றுகை அறிக்கையும வருடாந்தகணக்கீடும்

## Annual Performance Report and the Statement of Accounts of the Finance Commission for 2014

**2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கையும வருடாந்த கணக்கீடும்**

## Tamil Tranlation தமிழாக்கம்

# பொருளடக்கம்


**1. அறிமுகம்**....4

1.1 நிதி ஆணைக்குழுவின் ஆரம்பம்....4

1.2 நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகள்....4

1.3 ஆணைக்குழுவின் மூலாதாரக்கடமைகள்....5

**2. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான வழிகாட்டல்**....5

2.1 தொலை நோக்கு....5

2.2 பணிக்கூற்று....5

2.3 முதன்மையாக அழுத்தம் கொடுக்க வேண்டிய பகுதிகள்வுாசரளவ யுசநயள....6

**3. நிறுவக ஒழுங்கமைப்பு மற்றும் உத்தியோகத்தர் தகவல்**....6

3.1 நிதிஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு....6

3.2 நிதி ஆணைக்குழு செயலகம்....6

3.3 2014.12.31 திகதியில் உள்ளவாறு உத்தியோகத்தர்கள்....7

3.4 நிறுவக அட்டவணை....9

**4. 2014 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை**....10

4.1 கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி....10

4.2 பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி....12

4.3 பாதீடு மற்றும் எதிர்வுகூறல் பகுதி....12

4.4 கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பகுதி....13

4.5 நிர்வாகப் பகுதி....13

4.6 நிதிப்பகுதி....16

**5. பொது நிர்வாகம்**....17

5.1 உத்தியோகத்தர் - 2014....17

5.2 நிதி ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் - 2014....18

5.3 நிதி ஆணைக்குழுவுக்கு புதிய நியமனங்கள் - 2014....18

**6. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள உபாயங்கள்**....19

**7. கணக்காய்வு அறிக்கை - 2014**....20

## நிதி ஆணைக்குழுவின் 2014 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை அறிக்கை மற்றும் கணக்குக் கூற்று

# 1. அறிமுகம்

### 1.1 நிதி ஆணைக்குழுவின் ஆரம்பம்

இலங்கை சனநாயக் குடியரசின் அரசியலமைப்புக்கு 1987 ல் கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தம் மாகாண சபைகள் மற்றும் நிதி ஆணைக்குழு ஆகியவற்றை ஆகியவற்றை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. மாகாணங்களுக்கு வளங்களை மாற்றும் செயன்முறையை எளிதாக்குவது மற்றும் மாகாண திட்டமிடுதல் ஆகியவற்றுக்காக நிதி ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்டது.

அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தில் சுட்டிக்காட்டியிருப்பது போல, நிதி ஆணைக்குழுவின் பிரதான பொறுப்புகள், நாட்டில் பிராந்திய சமச்சீர் பிராந்திய அபிவிருத்தி அடைவதை நோக்கமாக் கொண்டு, ஒன்பது மாகாணங்களுக்கிடையில் நிதியைப் பகிர்ந்தளித்தல் தொடர்பாக கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை உருவாக்குதல் அரசாங்கத்துக்கு பரிந்துரைகள் செய்தல் முதலியன.

### 1.2 நிதி ஆணைக்குழுவின் பொறுப்புகள்

அரசியலமைப்பின் உறுப்புரை 154 R (3), (4) மற்றும் (5) ஆகியவற்றில் நிதி ஆணைக்குழுவின் கட்டளை சுட்டிக் காட்டப்பட்டுள்ளது;

1. மாகாணங்களின் தேவைகளை ஈடுசெய்வதற்கு போதுமான நிதிகளை வருடாந்த பாதீட்டிலிருந்துபகிர்ந்தளிக்கும் நோக்கமாக,அரசாங்கத்தோடு ஆலோசனை செய்வது மற்றும் அரசாங்கத்துக்கு பரிந்துரைகளை வழங்குதல்

2. ஆணைக்குழு பின்வருவனவற்றை ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்வது அதன் கடமையாகும்:-

    a) அரசாங்கத்தினால் மாகாணங்களின் பயன்படுத்தலுக்காக ஆண்டு தோறும் வழங்கும் நிதியை எந்த கொள்கை அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க வேண்டும் எனவும்-மற்றும்

    b) ஜனாதிபதியால் மாகாண நிதி தொடர்பாக ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும் ஏனைய விடயங்கள்.

    c) ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட கட்டளையான,“ஆணைக்குழு நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்டு கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்கல்”என்பதற்கமைவாக, ஒவ்வொரு மாகாணத்தினதும் மக்கள் தொகை, ஒவ்வொரு மாகாணத்தினதும் தனிநபர் வருமானம், ஒவ்வொரு மாகாணத்தினதும் தனிநபர் வருமானத்துக்கும் ஏனைய மாகாணங்களுக்கிடையிலான ஆகக்கூடிய தனிநபர் வருமானத்துக்கும் இடையிலுள்ள வித்தியாசத்தைப் படிப்படியாகக் குறைக்க வேண்டிய தேவை ஆகியவற்றைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும். அதன்படியே ஆணைக்குழு நிதிகளை மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கும்.

அரசியலமைப்பின் 154 R (7)உறுப்புரையின் பிரகாரம் கோரப்படுவது,'' அந்த உறுப்புரையின் கீழ் நிதிஆணைக்குழு சமர்ப்பித்த ஒவ்வொரு பரிந்துரையையும் ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்து அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பற்றியும் அறிப்பார்''

### 1.3 ஆணைக்குழுவின் மூலாதாரக்கடமைகள்

**அ**. மாகாண தேவைகளை மதிப்பிடுதல்.

**ஆ**. மாகாணங்களுக்கிடையில் ஆண்டு தோறும் நிதிகளைப் பகிர்ந்தளித்தல்.

**இ**. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகையை மீள்வரும் மற்றும் மூலதனத் தேவைகளுக்கிடையில் பங்கிடுதல்.

**ஈ**. மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) மற்றும் பிரமாண அளவு அடிப்படைக் கொடை (CBG) ஆகியவற்றுக்கிடையில் மூலதன நிதிகளை தனித்தனியாகப் பகிர்ந்தளித்தல்

**உ**. அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தித் துறைகள் / முகவர்களுக்கிடையில் மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை (PSDG) யைப் பிரித்தளித்தல்

**ஊ**. மாகாண நிதியை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் சமச்சீர் பிராந்திய அபிவிருத்தியை அடையும் நோக்கோடு கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை உருவாக்கல்

## 2. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான வழிகாட்டல்

### 2.1 தொலை நோக்கு

எல்லா மாகாணங்களிலும் சமமான மற்றும் சமச்சீரானதுமான சமூக-பொருளாதார அபிவிருத்தி

### 2.2 பணிக்கூற்று

மாகாணங்கள் பிரதேச சமச்சீர் அபிவிருத்தியை அடைவதற்காகவும் நியாயமானதும் சமமானதுமான ஒழுங்கில் மாகாணத்தினுள்ளும் மாகாணங்களுக்கிடையிலும் வேறுபாடுகளைக் குறைப்பதற்குப் பொருத்தமான பரிந்துரைகளை அரசாங்கத்துக்கு சமர்ப்பித்தல் , கொள்கைகள் வழிகாட்டுதல்களை உருவாக்கல் ,திட்டமிடல் மற்றும் திட்டமிடல் உதவிகளை வழங்கல், வளங்களைப் பகிர்ந்தளித்தல், அபிவிருத்தி முயற்சிகளை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல், தேசிய மற்றும் மாகாண முகவர்களை ஒருங்கிணைத்தல்.

### 2.3 முதன்மையாக அழுத்தம் கொடுக்க வேண்டிய பகுதிகள்வுூசரளவ யுசநயள

- மாகாணங்களுக்கு நிதி வளங்கள் ஒதுக்குதல் மற்றும் பகிர்ந்தளிப்பதில் கொள்கைகள் உருவாக்கல் மற்றும் அறிவித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்தல்
- மாகாணங்களுக்கிடையில் வளங்கள் நியாயமான முறையில் பகிர்ந்தளிப்பதை நிச்சயித்தல்
- பிரதேச வேறுபாடுகளைக்குறைத்து மனித அபிவிருத்திக்கு ஊக்கமளித்தல்
- மாகாணங்களில் வளங்கள் திறமையாகப் பயன்படுத்தலை நிச்சயித்தல்
- மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் வருமான உருவாக்கத்தை அதிகரித்தல்
- மாகாண மற்றும் உள்ளூர் நிறுவன ஆட்சியில் நிறுவன அபிவிருத்தியை பலப்படுத்தல்
- தேசிய மட்ட மற்றும் மாகாணங்களுக்கிடையில் பயனளிக்கக்கூடிய இணைப்பை அடைதல்
- அரச தனியார் கூட்டுத்தொழில் மூலம் தொழில் முயற்சிகளை ஊக்குவித்தல் (PPP)
- நிதி ஆணைக்குழுவின் மனித மற்றும் நிறுவன ஆளுமையை அபிவிருத்தி செய்தல்

## 3. நிறுவக ஒழுங்கமைப்பு மற்றும் உத்தியோகத்தர் தகவல்

### 3.1 நிதிஆணைக்குழுவின் ஒழுங்கமைப்பு

நிதி ஆணைக்குழு, முறையே மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரிச் செயலாளர் ஆகிய இருவரையும் பதவி வழி அங்கத்தவர்களாக உள்ளடக்கி, மொத்தமாக ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டது. ஏனைய மூன்று அங்கத்தவர்களும் பிரதான சமூகங்கள் மூன்றைப் பிரதநிதித்துவம் செய்யத்தக்கதாக நியமனம் செய்யப்படுவார்கள் 2014 இல், நிதி ஆணைக்குழு அங்கத்தவர்களாக இருந்தவர்கள் திரு.ஆரியரத்ன ஹேவாகே (தலைவர்), திரு.எம்.என்.ஜுனைட், திரு.எஸ்.அமிர்தலிங்கம்( திரு.சி.பி.இ.குணசிங்கம் காலமானதைத் தொடர்ந்து, அங்கத்தவராக நியமிக்கப்பட்டவர்), கலாநிதி.பி.பீ.ஜயசுந்தர (பதவி வழி அங்கத்தவர்), மற்றும் திரு.அஜித் நிவாரட் கப்ரால்(பதவி வழி அங்கத்தவர்)

### 3.2 நிதி ஆணைக்குழு செயலகம்

நிதி ஆணைக்குழு செயலகம் “ஏ” தர திணைக்களமாகக் கடமைகளை ஆற்றுகின்றது. அது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயலாளரால் தலைமையில் கடமையாற்றுகின்றது. அவருக்கு உதவியாக பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், உள்ளகக் கணக்காய்வாளர், கணக்காளர், உதவிப்பணிப்பாளர்கள்,, நிர்வாக உத்தியோகத்தர், உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் சிற்றூழியர்கள் ஆகிய பல்வேறு பணியாளர்களைக் கொண்டுள்ளது.

## 3.3 2014.12.31 திகதியில் உள்ளவாறு உத்தியோகத்தர்கள்


| இல. | பதவி | சேவை | தரம் / வகுப்பு | வேதன அளவு (தாபன விதிக் கோவை 6/2006) | அனுமதிக் கப்பட்ட ஆளணி |
|---|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | - | - | SL 3-2006 | 01 |
| 02 | பணிப்பாளர் | இலங்கை நிர்வாக சேவை | I | SL 1-2006 | 01 |
| 03 | பணிப்பாளர் | இலங்கை திட்டமிடல் சேவை | I | SL 1-2006 | 02 |
| 04 | பணிப்பாளர் | திணைக்கள சேவை | I | SL 1-2006 | 01* |
| 05 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப்பணிப்பாளர் | இலங்கை நிர்வாக சேவை | III/II | SL 1-2006 | 02 |
| 06 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப்பணிப்பாளர் | இலங்கை திட்டமிடல் சேவை | III/II | SL 1-2006 | 05 |
| 07 | பிரதிப்பணிப்பாளர் / உதவிப்பணிப்பாளர் | திணைக்கள சேவை | III/II | SL 1-2006 | 02* |
| 08 | கணக்காளர் | இலங்கை கணக்காளர் சேவை | III/II | SL 1-2006 | 01 |
| 09 | உள்ளக கணக்காய்வாளர் | இலங்கை கணக்காளர் சேவை | III/II | SL 1-2006 | 01 |
| 10 | நிர்வாக உத்தியோகத்தர் | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | Supra | MN 7-2006 A | 01 |
| 11 | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை | 2-II/1 | MN 6-2006 A | 01 |
| 12 | புள்ளிவிபர உத்தியோகத்தர் | திணைக்கள சேவை | III/II/I | MN 5-2006 A | 01◆ |
| 13 | பாதீட்டு உதவியாளர் | இணைக்கப்பட்ட சேவை | - | MN 4-2006 A | 02 |
| 14 | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | இணைக்கப்பட்ட சேவை | - | MN 4-2006 A | 10• |
| 15 | உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர | இணைக்கப்பட்ட சேவை | - | MN 4-2006 A | 09• |
| 16 | நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் | இணைக்கப்பட்ட சேவை | - | MN 4-2006 A | 05• |
| 17 | நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் | இணைக்கப்பட்ட சேவை | - | MN 4-2006 A | 05• |
| 18 | பொது முகாமைத்துவ உதவியாளர் | பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை | III/II/I | MN 2-2006 A | 13 |
| 19 | 2015 வரவு செலவுத்திட்ட உத்தேசத்துக்கு அமைவாக தாபன விதிக்கோவை 25/2014 முகாமைத்துவ உதவியாளர் (தொழில் நுட்ப மற்ற) | திணைக்கள சேவை | | MN 1 | 02 |
| 20 | சாரதி | இணைந்த சாரதிகள் சேவை | III/II/I | PL 3-2006 A | 08 |
| 21 | அலுவலக உதவியாளர் | அலுவலக ஊழியர் சேவை | III/II/I | PL 1-2006 A | 05 |
| **எல்லாமாக அனுமதிக்கப்பட்ட ஆளணியின் எண்ணிக்கை** | | | | | **78** |

* இந்தப் பதவி  தரம் III / II / Iஎன இணைந்த திணைக்கள சேவைக்குரிய பதவி. ஆகவே, அவன் / அவள் பதவி உயர்வு பெறும்போது தொடர்பான பதவிப் பெயரைப் பயன்படுத்த உரித்துடையவராவார். ஓர் உத்தியோகத்தர் நிரந்தர அடிப்படையில் பதவி உயர்த்தப்பட்ட தரத்தை விட பதில் கடமையாற்றும் அடிப்படையில் கடமைகளைச் செய்ய நியமிக்கப்படக்கூடாது. இந்தப்  பதவிப் பெயருக்காக, முறையான ஆட்சேர்ப்பு நடைமுறை அனுமதிக்கப்பட வேண்டும்.

◆ குடிசனத்தொகை புள்ளிவிபர திணைக்களத்தால் நிதி ஆணைக்குழுவுக்கு விடுவிக்கப்பட்டவர்.

• இணைக்கப்பட்ட சேவை உத்தியோகத்தர்கள் திணைக்கள உத்தியோகத்தர் சேவைக்கு உள்ளீர்க்கப்படுவார்கள்.

### 3.4 நிறுவக அட்டவணை



## 4. 2014 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை

நிதி ஆணைக்குழுவின் பிரதான கடமை நாட்டில் சமச்சீர் பிரதேச அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்காக மாகாணங்களுக்கிடையே நிதிகளைப் பகிர்ந்தளித்தல் மற்றும் அத்தகைய நிதிகளை விளைதிறனுள்ள வகையில் பயன்படுத்தி நோக்கங்களை அடைவதற்காக வழிகாட்டுதல்களையும் தொழில் நுட்ப வழிகாட்டுதல்களையும் வழங்குதல். இச் செயன்முறையில், நிதி ஆணைக்குழுத் தலைவர் தலைமையில் ஆணைக்குழுவினால் தேவையான கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2014 ஆம் ஆண்டில் ஆணைக்குழு நான்கு தடவைகள் கூடியது.

நிதி ஆணைக்குழு ஆறு பகுதிகளைக் கொண்டது.

1. கொள்கை, ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி.
2. பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி.
3. பாதீடு மற்றும் எதிர்வு கூறல் பகுதி.
4. கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுதல் பகுதி.
5. நிர்வாகப் பகுதி.
6. நிதிப்பகுதி.

நிதி ஆணைக்குழுவுக்கு அரசியல் அமைப்பால் கையளிக்கப் பெற்ற பொறுப்புகளை கொள்கை,ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி, பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி மற்றும் பாதீடு மற்றும் எதிர்வு கூறல் பகுதி மேற்கொண்டன. நிர்வாகப் பகுதி மற்றும் நிதிப்பகுதி ஆகியவற்றால் துணைச்சேவைகள் வழங்கப் பட்டன.

### 4.1 கொள்கை ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் பகுதி

2014 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட கொள்கைகள் மற்றும் நோக்கங்கள் தொடர்பாக மாகாணங்களுக் கிடையில் நிதிகளைப் பகிர்ந்தளித்த வழியில் 2015 ஆண்டுக்காக மாகாணங்களுக் கிடையில் பாதீட்டு ஏற்பாடுகளை உள்ளடக்கியதாக பாதீட்டு பரிந்துரைகள் செய்யப்பட்டன. அமைச்சரவையின் அனுமதி பெற்ற பின்னர் அதி மேதகு ஜனாதிபதியால் பரிந்துரைகள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

குறிப்பிடப்பட்ட வருடத்தில், நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட, 2015 ஆம் ஆண்டுக்கான மூலதனக் கொடைகளின் கோரிக்கைகள் தொடர்பான வழிகாட்டுதல்களை அடிப்படையாகக் கொண்டு,மாகாண அதிகாரிகளால் அவர்களுடைய நிதித்தேவைகள் சமர்ப்பிக்கப்பட்டன. மாகாணங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தேவைகளை மதிப்பீடு செய்த பின்னர், மூலதனக் கொடைகளுக்கான பரிந்துரைகள் பொதுத் திறைசேரிக்கு அனுப்பப் பட்டன. நிதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு பொதுத் திறைசேரி வழங்கிய மூலதனக் கொடைகள் 2014 ஒக்டோபர் மாதம் மாகாணங்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.இச் செயன் முறையில், மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் மிக நெருங்கியதாக மாறும் தன்மைகளைக் கொண்ட புள்ளிவிபர வாய்பாடு கணக்கில் எடுக்கப்பட்டு பின்பற்றப்பட்டது. இத்தகைய மாறும் தன்மைகளுக் கிடையில் மாகாண தனியாள் வருமானம், வறுமை விகிதம், குழந்தை மற்றும் பிரசவ இறப்பு விகிதங்கள், பாடசாலை சேர்ப்பு விகிதாசாரம், மாணவர்களின் செயலாற்றுகை, வீட்டின் தரங்கள் மற்றும் மாகாண வீதி வலைப்பின்னல் வேலைகள் முக்கிய இடம் பெற்றன. 2015 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட மூலதனக் கொடைகள் பின்வருமாறு.

*ரூபா.மில்*

| **மாகாணம்** | **மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை** | **அபிவிருத்தித் திட்டங்கள்** | **அளவுத்திட்ட அடிப்படைக்கொடை** |
|---|---:|---:|---:|
| மேல் | 1,452 | 1,145.91 | 525 |
| மத்திய | 1,390 | 2,489.35 | 500 |
| தென் | 1,305 | 2,691.80 | 385 |
| வட | 1,440 | 3,597.80 | 400 |
| கிழக்கு | 1,190 | 1,279.32 | 400 |
| வட மேல் | 1,325 | 1,174.77 | 425 |
| வட மத்திய | 1,190 | 1,040.10 | 375 |
| ஊவா | 1,350 | 2,011.17 | 375 |
| சப்பிரகமுவ | 1,365 | 2,995.10 | 400 |
| **மொத்தம்** | **12,007** | **18,425.32** | **3,785** |

மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைகள் PSDGதுறைகள் /முகவர்களுக்கிடையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட போது, கடந்த கால செயலாற்றுகை, நிறுவக ஆளுமை, வெளிநாட்டு உதவி பெற்ற திட்டங்கள், அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் கிடைக்கத் தக்கதாக உள்ள உள்ள வளங்கள் ஆகியவை தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டில் மாகாணங்களுக்காக துறைகள் /முகவர்களுக்கிடையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடைகள் PSDGஇணைப்புI இல் காட்டப்பட்டுள்ளது.

மக்களின் நன்மைக்காக மாகாணங்களுக் கிடையில் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை விளைதிறனுள்ளதாக பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நிதி ஆணைக்குழுவால் வழிகாட்டுதல்களின் திரட்டு வழங்கப் பட்டது. 2015 ஆம் ஆண்டுக்காக மாகாண அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும்போது இந்த வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப் படுகிறது.

மேலதிகமாக நிதி ஆணைக்குழுவின் 2012 ஆம் ஆண்டுக்கான அறிக்கை அச்சிடப்பட்டு தொடர்பானவர்களுக்கு விநியோகிக்கப் பட்டது.

## 4.2 பெறுபேற்று அடிப்படை திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் பகுதி

The 2014 ஆம் ஆண்டில் இந்தப் பகுதியால் பின் வரும் அடிப்படைக் கடமைகள் பூர்த்தி செய்யப்பட்டன.

i. 2014 ஆம் ஆண்டின் மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான சம்மதம் நிதி ஆணைக்குழுவால் வழங்கப்பட்டது.

ii. 2015 ஆம் ஆண்டில் மாகாண வருடாந்த அபிவிருத்தித் திட்டங்களின் திருத்தங்களுக்கான சம்மதம் வழங்கப்பட்டது.

iii. 2015 ஆம் ஆண்டுக்கான பரிந்துரைகளைத் தயாரிப்பதில் பங்களிப்பு நல்கியதோடு, அவை நிதி ஆணைக்குழுவால் அதிமேதகு ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டது.

விவசாய மற்றும் கால்நடை வளர்ப்புத் துறைகளில் உள்ள பண்ணைகளை அவதானிப்பதற்காக, 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களுக்கு நிதி ஆணைக்குழு மற்றும் மத்திய மாகாண உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய வெளிக்கள விஜயம் இடம் பெற்றது. பெரிய வெண்காயம் மற்றும் விதை உருளைக்கிழங்கு உற்பத்தி தொடர்பான பிரச்சினைகளை அவதானிப்பத்தற்கு விசேட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. வெளிக்கள விஜயத்தின் போது பெற்றுக்கொண்ட அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு, பெரிய வெண்காயம் மற்றும் விதை உருளைக் கிழங்கு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியால் விசேட கடன்திட்டத்தை நடைமுறைப்படுத்த நிதி ஆணைக்குழு ஆலோசனை வழங்கியது.

## 4.3 பாதீடு மற்றும் எதிர்வுகூறல் பகுதி

இந்த பகுதியின் பிரதான கடமைகள் மாகாண மீண்டுவரும் தேவைகளை மதிப்பீடு செய்த பின்னர் மாகாண நிதித் தேவைகளுக்கான பரிந்துரைகளை பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பித்தல் மற்றும் மொத்தக் கொடையை மாகாணங்களுக்கிடையே பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.-

நிதி ஆணைக்குழுவால் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு அமைவாக 2015 ஆம் ஆண்டுக்கான மீள்வரும் தேவைகளுக்கு கோரப்படும் தொகையை நிதி ஆணைக்குழு பெற்றுக் கொண்டது. மாகாணங்களால் சமர்ப்பிக்கப்பட்ட மீள்வரும் தேவைகளை மதிப்பிடப்பட்ட பின்னர், வருமான இலக்குகள் கழிக்கப்பட்டு உண்மையான தேவைகள் மதிப்பிடப்பட்டது. அதற்கமைவாக, மொத்தக் கொடைக்கான பரிந்துரைகள் கவனத்தில் கொள்ளும் பொருட்டு பொதுத் திறைசேரிக்கு அனுப்பப் பட்டது.

2015 ஆம் ஆண்டுக்கான மொத்தக் கொடை பகிரந்தளிப்பை கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது.

*ரூபா.மில்*

| மாகாணம் | மொத்தக் கொடை |
|---|---|
| மேல் | 42,450 |
| மத்திய | 23,834 |
| தென் | 21,781 |
| வட | 15,123 |
| வட மேல் | 23,105 |
| வட மத்திய | 13,544 |
| ஊவா | 15,241 |
| சப்பிரகமுவ | 18,038 |
| கிழக்கு | 16,484 |
| **மொத்தம்** | **189,600** |

## 4.4 கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுப் பகுதி

கொடுக்கப் பட்ட படிவங்களைப் பயன் படுத்தி, கொள்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் மட்டங்களில் மாகாண அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு மாகாணங்கள் பணிக்கப்பட்டன.

ஆணைக்குழுவின் மும்மொழி இணையத்தளத்தை நாளது வரையில் ஒழுங்கு செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்ளப் பட்டுள்ளன.

## 4.5 நிர்வாகப் பகுதி

இந்தப் பகுதியின் செயலாற்றுகை கீழே தரப்பட்டுள்ளது.

(i) தனியாள் கோவைகள் மற்றும் ஏனைய சாதனங்கள் ஆகியவற்றைப் பேணுதல் உள்ளடங்கலாக ஆளணி முகாமைத்துவம்.

வருடாந்த சம்பள ஏற்றங்களுக்கான அனுமதி பெற்ற பின்னர் உரிய கொடுப்பனவுகள் செய்யப் பட்டுள்ளது. சில உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பெயரில், சேவைச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ii) சிட்டைகளுக்கான கொடுப்பனவுகள்

கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச்சீட்டுகள், செயலாளரின் அனுமதி பெற்றுக்கொண்ட பின்னர் ஆணைக்குழுவால் கொடுப்பனவுக்காக நிதிப் பகுதிக்குச் சமர்ப்பிக்கப் பட்டன. தொடர்பான காசோலைகள் முடிவு செய்யப்பட்டதும், தொடர்பான ஆட்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அவற்றை அனுப்பி வைப்பதற்கு நிதிப்பகுதி ஆயத்தங்களைச் செய்துள்ளது. சகல கொடுப்பனவுகளும் முறையாக ஆவணப்படுத்தப் பட்டுள்ளது.

(iii) பாதுகாவல் மற்றும் துப்பரவாக்கும் சேவைகள் ஆகியவை தொடர்பான மேற்பார்வை.

சேவை உடன்படிக்கைகளில் உள்ளடங்கியுள்ள வாசகங்களின் பிரகாரம் சேவைகள் தொடர்பான சகல உறுதிச்சீட்டுகளும் பரிசீலிக்கப்பட்டன. பின்னர்,கொடுப்பனவுகள் தொடர்பாகவும் மற்றும் அனுமதிக்காகவும் உறுதிச் சீட்டுக்கள் நிதிப் பகுதிக்குசமர்ப்பிக்கப்பட்டன.

(iv) அலுவலக சுற்றுப்புறம் மற்றும் ஏனைய சொத்துக்களைப் பராமரித்தல்

வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்படும் இந்த அலுவலகம்- சுற்றுப்புறம், உரிமையாளராலேயே பராமரிக்கப் படுவதோடு, ஆணைக்குழுவின் நிர்வாகப்பகுதியால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றது. சேவை உடன்படிக்கைகளின் பிரகாரம் ஏனைய சொத்துக்களான வாகனங்கள், கணினிகள், அச்சிடும் கருவிகள்,பிரதி, எடுக்கும் இயந்திரங்கள், மற்றும் தொலை நகல் இயந்திரங்கள் ஆகியவற்றின் பராமரித்தல், திருத்துதல் ஆகிய வேலைகள் இந்தப் பகுதியால் மேற்கொள்ளப்படுகின்றன.

(v) விடுதலை, கடன்கள்,சம்பள ஏற்றங்கள் தொடர்பாக நிர்வாகப்பகுதியின் நாளாந்த நடவடிக்கைகள்.

விடுதலை தொடர்பான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப் பட்டதும் அவை முறையாக ஆவணப் படுத்தப் பட்டு, விரல் பதிவு அடையாள இயந்திர அறிக்கைகளைப் பயன்படுத்தி விடுதலைப்பதிவேடு நிகழ் பதிவேட்டில் நாளது வரையிலான தகவல்கள் பதியப்படுகிறது. கடமை விடுதலை, குறுகிய விடுதலை மற்றும் வெளியூர்களுக்கான உத்தியோக விஜயங்கள் தொடர்பான ஆவணங்கள் முறையாகப் பேணப்படுவதோடு, தொடர்பான பதிவுகள் கணினியிலும் பதியப்படுகிறது. மேலும், கணினியைப் பயன்படுத்தி , செயலாளரால் அனுமதிக்கப்படும் தாமதமான வரவுகளும் முறையாக ஆவணப்படுத்தப்படுகிறது.

(vi) பொருட்களையும் சேவைகள் ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளல்

துப்பரவாக்கல் மற்றும் பாதுகாப்புச் சேவைகளுக்காக, பல்வேறு முகவர்களிடமிருந்து விலைக்கூறுகள் கோரப்பட்டு, மிகக் குறைந்த தொகையைக் கோரியவர்கள் என்ற அடிப்படையில் , விசன் கெயர் பிரைவேட் லிமிட் மற்றும் டபிள்யு.ஈ. செக்கியுறிற்றி சேர்விஸ் பிரைவேட் லிமிட் சேவைகளை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப் பட்டார்கள். இந்த முகவர்கள் சேவை உடன்படிக்கைகளில் சொல்லப்பட்ட வாசகங்களுக்கு அமைவாக தங்கள் சேவைகளை குறிபிடப் பட்ட வருடத்தில் வழங்கினார்கள்.

(vii) பயிற்சி மற்றும் அபிவிருத்தியை எளிதாக்குதல்

2014 ஆம் ஆண்டில் பின் வரும் உத்தியோகத்தர்களுக்கு உள்நாட்டில் பயிற்சி நெறிகளில் பங்கு பற்ற வசதிகள் வழங்கப்பட்டது.

### உள்ளூர் பயிற்சி நெறி முறைகள்

| | பெயர் | புதவி | பயிற்சி நெறி | நிறுவகம் | திகதி |
|---|---|---|---|---|---|
| 01 | திரு.கே.எச்.ஜி.ஏரங்க நயனஜித் | காரியாலய சேவகர் O.E.S.III | தமிழ் பயிற்சி நெறி | அரச கரும மொழிகள் திணைக்களம் | 2014.01.07 -06 மாதம்(வாரத்துக்கு01 நாள்) |
| 02 | திரு.எஸ்.கே.கே.காமிந்த கொடிகார | உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | ஆங்கில பயிற்சி நெறி | பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவகம் | 2014.01.22 - 2014.03.28 |
| 03 | திருமதி.யு.பி.விஜயஹேவா | கணக்காளர் | ஆங்கில பயிற்சி நெறி | பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவகம் | 2014.01.22 - 2014.03.28 |
| 04 | திரு. எம்.எல்.ஏ.சந்திரதாச | பிரதிப்பணிப்பாளர் (பதில்) | ஆங்கில பயிற்சி நெறி | பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவகம் | 2014.01.22 - 2014.03.28 |
| 05 | திருமதி.ரேணுகா நிஷாந்தி பெரேரா | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் | ஆங்கில பயிற்சி நெறி | பிரிட்டிஷ் கவுன்சில் நிறுவகம் | 2014.01.25 - 2014.03.29 |
| 06 | செல்வி.ஏ.பி.எஸ்.பி.சமரதுங்க | பொது முகாமைத்துவ உதவியாளர்-I | பெறுகை நடைமுறைகள் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 2014.07.17 - 2014.07.18 |
| 07 | திருமதி..பி.கமகே | பொது முகாமைத்துவ உதவியாளர்-I | ஆரச நிதி முகாமைத்துவம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் | 2014.07.24 - 2014.07.25 |
| 08 | திரு.கே.எச்.ஜி.ஏரங்க நயனஜித் | காரியாலய சேவகர் O.E.S.III | மின்சார தொழில்நுட்ப வேலைத்திட்டம் | சமூக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம், பத்தரமுல்ல | 2014.08.19 |
| 09 | திரு.ஏ.டபிள்யு.ரவீந்திர ஜகத் குமார | காரியாலய சேவகர் O.E.S.III | மின்சார தொழில்நுட்ப வேலைத்திட்டம் | சமூக திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி மத்திய நிலையம், பத்தரமுல்ல | 2014.08.19 |
| 10 | திருமதி.ஈ.எச்.எம்.டினுஷா ஹேரத் | நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் | தமிழ் பயிற்சி நெறி | பண்டாரநாயக்கஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் | 2014.11.21 -- 12 நாட்கள் |
| 11 | திரு.டபிள்யு.ஜி.வசந்த குமார | சாரதி | தமிழ் பயிற்சி நெறி | பண்டாரநாயக்கஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் | 2014.11.21-- 12 நாட்கள் |
| 12 | திருமதி.யு.பி.விஜயஹேவா | கணக்காளர் | தமிழ் பயிற்சி நெறி | பண்டாரநாயக்கஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் | 2014.11.21 --12 நாட்கள் |
| 13 | திரு.கே.எச்.ஜி.ஏரங்க நயனஜித் | காரியாலய சேவகர் O.E.S.III | தமிழ் பயிற்சி நெறி | பண்டாரநாயக்கஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபம் | 2014.11.21 -- 12 நாட்கள் |

### 4.6 நிதிப்பகுதி

நிதி ஆணைக்குழு சட்டபூர்வ மற்றும் ஏனைய கடமைகள் மேற்கொள்வதை நிதிப் பகுதி எளிதாக்குகின்றது. மேலும்,பொதுத் திறைசேரியுடன் நல்ல இணைப்பைப் பேணுவதால வருடாந்த நிதித்தேவைகளுக்கு தேவையான நிதிகளை வழங்கும் பொறுப்பு மற்றும் ஒழுங்கான முறையில் அத்தகைய நிதிகளைப் பேணக்கூடியதாகவும் உள்ளது.

2014 ஆம் ஆண்டில் நிதி ஆணைக்குழு மீள்வரும் மற்றும் மூலதனச் செலவுகளுக்காக முறையே ரூபா-36,625.000.00 மற்றும் ரூபா.4,100,000.00 ஆகிய தொகைகளை பகிர்ந்து வழங்கியது.

மீள் வரும் செலவைப் பயன்படுத்திய வீதம் 90 % ஆகவும், மூலதனச் செலவு 41 % வீதமாகவும் குறைவடைந்தது. அநேகமான அலுவலக உபகரணங்கள் மற்றும் அவை போன்ற புதிய தளபாடங்கள் அந்த வருடத்தில் வாங்கியபடியால், குறிப்பிடப் பட்ட வருடத்தில் புதிய பொருட்கள் வாங்க வேண்டிய அவசியம் எழவில்லை. மூலதனப் பகிர்வை குறைவாகப் பயன்படுத்தியதும் ஒரு காரணமாகத் தெரிகிறது..

33/2013இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைப் பிரகாரம், ஒதுக்கீட்டு மற்றும் சகல கணக்குகளும் உரிய திகதிகளுக்கு முன்பாகவே பொது கணக்குகள் திணைக்களத்துக்கும்,குறிப்பாக மற்றும் கணக்காய்வு ஆணையாளர் நாயக திணைக்களத்துக்கும் சமர்ப்பிக்கப் பட்டது..

**2014 இல் நிதி ஏற்பாடுகள், செலவுகள் மற்றும் நிதிச் செயலாற்றுகை**

| கருத்திட்டக் குறியீடு | விபரம் | கருத்திட்டக் குறியீடு | விபரம் | நிதிச் செயலாற்றுகை |
|---|---|---|---|---|
| | **மீள் வரும் ஏற்பாடு/செலவு** | **ரூபா.** | **ரூபா.** | |
| | தனியாள் வேதனாதிகள் | 19,250,000.00 | 17,781,434.75 | 92% |
| | ஏனைய மீள்வரும் செலவுகள் | 17,375,000.00 | 15,210,776.41 | 87% |
| | **மொத்தம்** | **36,625,000.00** | **32,992,211.16** | **90%** |
| | **மூலதன ஏற்பாடு/ செலவு** | | | |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 500,000.00 | 37,730.00 | 6% |
| 2003 | வாகனங்கள் | 400,000.00 | 0.00 | 0% |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1,200,000.00 | 1,037,577.40 | 86% |
| 2103 | பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம் | 1,000,000.00 | 337,980.00 | 34% |
| 2401 | பயிற்சி மற்றும் ஆளுமையை உருவாக்குதல் | 1,000,000.00 | 294,670.00 | 29% |
| | **மொத்தம்** | **4,100,000.00** | **1,700,957.40** | **41%** |
| | **முழு மொத்தம்** | **40,725,000.00** | **34,693,168.56** | **85%** |

**முற்பணக் கணக்கு நடவடிக்கைகள்**

| விபரம் | செலவுக்கான உச்ச எல்லை | வரவுக்கான உச்ச எல்லை | பற்று மீதி உச்ச எல்லை |
|---|---|---|---|
| ஏற்பாடு | 3,500,000.00 | 1,000,000.00 | 20,000,000.00 |
| உண்மையான (நி.பி.505 (1) இன் கீழ் சீராக்கிய பின்னர்) | 2,053,763.00 | 1,619,437.00 | 7,160,488.00 |

# 5. பொது நிர்வாகம்

## 5.1 உத்தியோகத்தர் - 2014

| | |
|---|---|
| தலைவர்திரு. | ஆரியரத்ன ஹேவகே |
| செயலாளர் | திரு.டபிள்யு.எச்.முனசிங்ஹ |
| சிரேஷ்டபணிப்பாளர் | திரு.பி.சுமணபால |
| பணிப்பாளர் | திரு.ஏ.ரி.எம்.யு.டி.பி.தென்னக்கோன் |
| பிரதிப்பணிப்பாளர் | திரு.எம்.எல்.ஏ.சந்திரதாச |
| பிரதிப்பணிப்பாளர்(நிதி) | திருமதி.யு.பி.விஜயஹேவா |
| நிர்வாக உத்தியோகத்தர் | திருமதி.டபிள்யு.எஸ்.மங்கலிக |
| புள்ளி விபர உத்தியோகத்தர் | திருமதி.குமுதினி கௌசல்யா அல்மேடா |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.ரி.எம்.சி.குமாரிஹாமி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.பி.இந்திராதேவி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.கே.எஸ்.டி.நிலாந்தி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எஸ்.கே.கே.காமிந்த |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.ஆர்.ஆர்.ரணசிங்க |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எச்.எச்.பிரியந்த |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திருமதி.எம்.சி.தமயந்தி |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.ஏ.ஆர்.மரினா |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.எஸ்.வை.திசாநாயக்க |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.டபிள்யு.பி.சி.ஆர்.பி.ஹங்கம்பொருவ |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | திரு.எம்.பி.எம்.ஏ.எச்.பண்டார |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர் | செல்வி.டி.டி.ஜே.குமாரி |
| நிகழ்ச்சிதிட்ட உதவியாளர் | செல்வி.பி.ஏ.எஸ்.பிரியதர்சினி. |
| நிகழ்ச்சிதிட்ட உதவியாளர | திரு.எஸ்.பி.சமரசேகர |
| முகாமைத்துவ உதவியாளர் | திரு.ஈ.ஏ.எல்.இளையபெரும |
| முகாமைத்துவ உதவியாளர் | செல்வி.ஏ.பி.எஸ்.பி.சமரதுங்க |
| முகாமைத்துவ உதவியாளர் | திருமதி..பி.கமகே |
| முகாமைத்துவ உதவியாளர் | திரு.டி.கே.டி.கன்னங்கரா |

| | |
|---|---|
| முகாமைத்துவ உதவியாளர் | செல்வி.டி.ரி.கே.பெரேரா |
| முகாமைத்துவ உதவியாளர் | செல்வி.எம்.ஏ.எவ்.ரிவ்னா |
| சாரதி திரு | உபாலி செனெவிரத்ன |
| சாரதி | திரு.எம்.கே.ஆர்.பிரிமல் |
| சாரதி | திரு.பி.பி.ஜி.ஏ.தயானந்த |
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.ரி.ஜயமினி |
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.கே.எச்.ஜி.ஏரங்க நயனஜித் |
| காரியாலய சேவகர் O.E.S. | திரு.ஏ.டபிள்யு.ரவீந்திர ஜகத் குமார |
| தகவல் மற்றும் தொடர்பாடல் | திரு.திலின பிரமோத் விஜேவர்த்தன |
| தொழில் நுட்ப உத்தியோகத்தர் சேவை தரம் 2 (ஒப்பந்தம்) | |
| முகாமைத்துவ உதவியாளர்MN 1 (திணைக்கள) | திருமதி.சி.டி.ஆட்டிகல |
| முகாமைத்துவ உதவியாளர்MN 1 (திணைக்கள) | செல்வி.ஆர்.ஏ.நிஷானி மாதுக்க ரணசிங்க |
| காரியாலய சேவகர் O.E.S.(அமய) | செல்வி.ஜி.இசுரி ஆயிஷா சந்தாரனு |
| காரியாலய சேவகர் O.E.S.(அமய) | செல்வி.டபிள்யு.ஏ.சோனாலி டிலினி இரேஷா. |

## 5.2 நிதி ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்கள் - 2014

| | | | |
|---|---|---|---|
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்- | திருமதி.ஐ.வி.எல்.ஐ.லிலான்தி | - | 2014.04.15 |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்- | திருமதி.எஸ்.வீரதுங்க | - | 2014.04.15 |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்- | திரு.என்.ரத்நாயக்க | - | 2014.06.06 |
| உதவி ஆராய்ச்சி உத்தியோகத்தர்- | திரு.டபிள்யு.பி.ஏ.விஜேசூரிய | - | 2014.06.06 |
| நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர்- | செல்வி.மபிள்யு.ஆர்.என்.பெரேரா | - | 2014.10.20 |

## 5.3 நிதி ஆணைக்குழுவுக்கு புதிய நியமனங்கள் - 2014

முகாமைத்துவ உதவியாளர்MN 1(திணைக்கள) திருமதி.சி.டி.ஆட்டிகல

முகாமைத்துவ உதவியாளர் MN 1(திணைக்கள) செல்வி.ஆர்.ஏ.நிஷானி மாதுக்க ரணசிங்க

## 6. செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள உபாயங்கள்

புதிய அமைப்பில், புதிதாக அறிமுகம் செய்யப்பட்ட அணுகு முறைகளான மாகாண திட்டமிடல் மற்றும் பாதீடு ஆகியவற்றுக்கு பொருந்தத் தக்க வகையில் நிதி ஆணைக்குழுவின் சகல உத்தியோகத்தர்களின் அறிவு மற்றும் திறமைகளை அபிவிருத்தி செய்வது அவசியமாகிறது. மேலும்,நிறுவனம் மற்றும் உத்தியோகத்தர்களின் வினைத்திறன் மற்றும் உற்பத்தியை உயர்த்துவதற்காக உரிய உள்ளக நடவடிக்கைகளை எடுப்பது மிக மிக அவசியமாகும். தேவைப்படும் நடவடிக்கைகளை சுருக்கமாகப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

(i) நிதி ஆணைக்குழுவின் வகி பாகம், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் ஆகியவற்றின் முறைகளைக் குறிப்பிடும் நிதி ஆணைக்குழு சட்டத்தைத் தயாரித்தல் மற்றும் அதனை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்தல்.

(ii) ஆணைக்குழுவின் தற்போதைய வகி பாகத்துக்குப் பொருத்தமாக நிதி ஆணைக்குழுவின் நிறுவக அமைப்பு மற்றும் பதவி நிலைகளை மீள அமைத்தல். இது தொடர்பாக, திட்டமிடல் உபாயங்கள், திட்டங்களை மதிப்பிடுதல், நிதியிடல் மற்றும் சட்டம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய பதவிகளை உருவாக்குதல்.

(iii) திட்ட உபாயங்கள் மற்றும் புதிய முகாமைத்துவ பயிற்சிகள் ஆகிய துறைகளில் தேவைப்படும் பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதன் மூலம் செயலாற்றுகையை மேம்படுத்தல்.

(iv) உத்தியோகத்தர்கள் தங்கள் கடமைகளை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் செய்யத் தக்கதாக தேவையான சிங்கள, ஆங்கில மற்றும் தமிழ் மொழித் திறமைகளை பெற்றுக் கொள்வதற்காக விசேட பயிற்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல். இது தொடர்பாக உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்யும்போது தமிழ் மொழியில் நல்ல ஆற்றல் உள்ளவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல்.

(v) நிர்வாகம் மற்றும் கணக்கு கிளைகளில் இணைக்கப் பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு அலுவலக முகாமைத்துவம் மற்றும் புதிய முகாமைத்துவ செயன்முறைகள் தொடர்பாக பொருத்தமான அறிவை வழங்குதல்.

(vi) உத்தியோகத்தர்களை நல்ல வினைத்திறனுள்ளவர்களாக்கும் பொருட்டு தேவையான தகவல் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்த வேண்டும். ( புதிய பொதிகள் மற்றும் மின் அஞ்சல் பயன்பாடு) இது தொடர்பாக,தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப நிறுவகம் ICTA, இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம் SLIDA ஆகியவற்றுடன் நெருக்கமான உறவுகளை வைத்திருப்பது மிக முக்கியமாகும்.

## 7. கணக்காய்வு அறிக்கை - 2014

2014 ஆம் ஆண்டில் நான்கு (04) கணக்காய்வு அறிக்கைகள் கிடைக்கப் பெற்றன. 2014 ஆம் ஆண்டுக்கான இறுதி கணக்காய்வு அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. எனினும், வருடத்துக்குரிய கணக்காய்வாளர் நாயகத்தின் வரைவு அறிக்கையுடன், 31-12-2014 உடன் முடிவடைந்த வருடத்துக்குரிய நிதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைகள் மற்றும் புத்தகங்கள் ஆகியவற்றோடு ஒத்துப் போகத்தக்கதாக ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகளும் திருப்தியாகத் தயாரிக்கப் பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக் காட்டியுள்ளார்.

**இணைப்பு-1**

## பகிர்வு-2015

## மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை

*ரூபா.மில்லியன்*

| இல | துறை | மே மா | ம மா | தெ மா | வ மா | கி மா | வ மே மா | வ ம மா | ஊவா | சப்பிர | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **சமூக உட்கட்டமைப்பு** | **486** | **467** | **454** | **675** | **521** | **471** | **422** | **504** | **512** | **4,512** |
| 1.1 | கல்விச் சேவைகள் | | | | | | | | | | |
| | 1.1.1.கல்வி | 207 | 196 | 176 | 273 | 203 | 207 | 179 | 224 | 221 | 1,886 |
| | 1.1.2.கல்லூரித் தளபாட திருத்தம் | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 45 |
| 1.2 | மேல் நாட்டு மருத்துவம் | 194 | 190 | 170 | 278 | 208 | 165 | 149 | 182 | 196 | 1,732 |
| 1.3 | சுதேச மருத்துவம் | 26 | 23 | 35 | 39 | 38 | 33 | 36 | 35 | 32 | 297 |
| 1.4 | விளையாட்டு | 16 | 17 | 14 | 19 | 18 | 14 | 14 | 18 | 18 | 148 |
| 1.5 | நன்னடத்தை மற்றும் பிள்ளைப்பராமரிப்பு | 17 | 14 | 19 | 28 | 20 | 23 | 17 | 18 | 18 | 174 |
| 1.6 | சமூக சேவைகள் | 11 | 12 | 25 | 22 | 19 | 14 | 12 | 12 | 12 | 139 |
| 1.7 | கலாசாரம் மற்றும் மத விவகாரங்கள் | 5 | 5 | 5 | 6 | 5 | 5 | 5 | 5 | 5 | 46 |
| 1.8 | வீடமைப்பு | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 45 |
| **2** | **பொருளாதார உட்கட்டமைப்பு** | **712** | **696** | **598** | **594** | **520** | **662** | **606** | **668** | **669** | **5,725** |
| 2.1 | மாகாண வீதிகள் | 405 | 291 | 240 | 136 | 70 | 286 | 187 | 232 | 251 | 2,098 |
| 2.2 | தோட்ட வீதிகள் | 22 | 32 | 25 | - | - | - | - | 34 | 23 | 136 |
| 2.3 | போக்கு வரத்து | 27 | 24 | 22 | 21 | 26 | 14 | 12 | 18 | 19 | 183 |
| 2.4 | காணி | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 5 | 45 |
| 2.5 | விவசாய சேவைகள் | | | | | | | | | | |
| | 2.5.1.விவசாயம் | 26 | 50 | 44 | 73 | 68 | 53 | 58 | 55 | 50 | 477 |
| | 2.5.2. விவசாய வீதிகள் | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 10 | 90 |
| 2.6 | கால்நடை வளர்ப்பு | 21 | 32 | 26 | 42 | 54 | 35 | 30 | 35 | 31 | 306 |
| 2.7 | நன்னீர் மீன் வளர்ப்பு | 6 | 7 | 11 | 21 | 18 | 20 | 14 | 12 | 6 | 115 |
| 2.8 | நீர்ப்பாசனம் | 22 | 24 | 32 | 42 | 48 | 46 | 103 | 40 | 25 | 382 |
| 2.9 | கிராமிய அபிவிருத்தி | 16 | 22 | 23 | 35 | 19 | 23 | 27 | 26 | 25 | 216 |
| 2.10 | சிறு கைத்தொழில் | 14 | 16 | 13 | 14 | 12 | 14 | 11 | 12 | 14 | 120 |
| 2.11 | கிராமிய மின்மயமாக்கல் | 10 | 15 | 11 | 6 | 6 | 8 | 5 | 9 | 9 | 79 |
| 2.12 | சுற்றுலா | 23 | 32 | 40 | 36 | 48 | 23 | 30 | 32 | 35 | 299 |
| 2.13 | சமச்சீர் அபிவிருத்திக்காக விசேட திட்டங்கள் | 55 | 70 | 40 | 83 | 76 | 70 | 45 | 80 | 95 | 614 |
| 2.14 | பின்தங்கியதும் தனித்துவிடப்பட்டதுமான கிராமங்களுக்கான திட்டங்கள் | 50 | 66 | 56 | 70 | 60 | 55 | 69 | 68 | 71 | 565 |
| **3** | **உள்ளூராட்சி மற்றும் சமூக சேவைகள்** | **239** | **212** | **238** | **156** | **134** | **177** | **147** | **163** | **169** | **1,635** |
| 3.1 | உள்ளூராட்சி | | | | | | | | | | |
| | 3.1.1. உள்ளூராட்சி அதிகாரசபை வீதிகள் | 155 | 139 | 170 | 74 | 69 | 107 | 82 | 101 | 104 | 1,001 |
| | 3.1.2. வாரச் சந்தைகள் | 15 | 14 | 14 | 23 | 16 | 20 | 16 | 14 | 16 | 148 |
| | 3.1.3. சமூக நீர் வழங்கல் | 8 | 14 | 9 | 15 | 10 | 12 | 10 | 9 | 10 | 97 |
| | 3.1.4. மயான பூமிகள் | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 15 | 135 |
| | 3.1.5. கழிவு முகாமைத்துவம் | 40 | 24 | 25 | 22 | 18 | 17 | 18 | 18 | 18 | 200 |
| | 3.1.6. மாநகரசபைகளின் ளேமை விருத்தி | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 | 9 |
| 3.2 | கூட்டுறவு | 5 | 5 | 4 | 6 | 5 | 5 | 5 | 5 | 5 | 45 |
| **4** | **நெகிழ்ச்சித்தன்மையான தொகையின் கீழ் திட்டங்கள்** | **15** | **15** | **15** | **15** | **15** | **15** | **15** | **15** | **15** | **135** |
| | | | | | | | | | | | |
| | **மொத்தம்** | **1,452** | **1,390** | **1,305** | **1,440** | **1,190** | **1,325** | **1,190** | **1,350** | **1,365** | **12,007** |

**குறிப்பு: நிதிகம தடுப்பு வீட்டுக்கான மேம்பாட்டுக்கான ரூபா5 மில்லியன் உள்ளடங்கலாக தெ மா சமூக சேவைகள் ரூபா 25 மில்லியன்**